# Indian Polity Notes Part 1 in Tamil

## 1] இந்தியா - ஒரு அறிமுகம்

நமது இந்திய நாடு பழமையான நாகரீகத்தையும், உயர்ந்த பண்பாட்டையும், சிறந்த பண்புகளையும் கொண்டது.

- உணவுப்பொருள் உற்பத்தியில் தன்னிறைவையும் தொழில் துறையில் உலக அளவில் பத்தாவது இடத்தையும் பெற்றுள்ளது.
- உலக நாடுகளின் வரிசையில், விண்வெளி ஆய்வில் இந்தியா ஆறாவது இடத்தை பெற்றுள்ளது.
- நில அளவு அடிப்படையில் (32,87,163 சதுர கிலோமீட்டர் பரப்பளவு) உலகின் 7 – வது பெரிய நாடாகவும், மக்கள் தொகை அடிப்படையில் சீனா அடுத்ததாக இரண்டாவது இடத்தையும் இந்தியா பெற்றுள்ளது.

**இருப்பிடம்**

- இந்தியா, வடக்கே இமயமலைத்தொடர், தெற்கே இந்தியப்பெருங்கடல், கிழக்கே வங்காளவிரிகுடா, மேற்கே அரபிக்கடல் ஆகியவற்றினால் சூழப்பட்டுள்ளது.
- $8^{\circ}4$ முதல் $37^{\circ}6'$ வடஅட்சக் கோட்டிற்கு இடையிலும் $68^{\circ}7$ முதல் $97^{\circ}25$ வரையில் கிழக்கு தீர்க்க கோட்டிற்கு இடையேயும் இடம் பெற்றுள்ளது.

**மக்கட்தொகையும் கல்வியறிவும்**

- 2011 – ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 1,210,193,422 மக்கள் இந்தியாவில் உள்ளனர்
- இவர்களில் ஆண்கள் 623,724,248, பெண்கள் 586,469,174 ஆகும்.

**மக்கள் அடர்த்தியும் கற்றோரின் விழுக்காடும்**

- மக்கள்தொகை அடர்த்தி – 382 பேர் (2011).
- மக்கள்தொகை அடர்த்தி என்பது ஒரு சதுர கிலோமீட்டருக்குள் வாழும்மக்களின் சராசரி எண்ணிக்கையாகும்.
- 2011 – ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நாட்டில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 74.04% ஆகும்.
- இவற்றில் ஆண்கள் 82.14%, பெண்கள் 65.46% கல்வியறிவு பெற்றவர்கள் ஆவார்.

**அரசியல் நிர்வாகம்**

- இந்தியா உலகின் மிகப்பெரிய நாடாளுமன்ற மக்களாட்சி நாடாகும். இது இறையாண்மையுடன், சமதர்ம, மதசார்யற்ற, மக்களாட்சிக் குடியரசு நாடு.

www.winmeen.com

- இந்தியா அரசியல் அமைப்பின் படி இந்தியக் குடியரசானது நிர்வகிக்கப்படுகிறது.

**இந்திய தேசியச் சின்னங்கள்**

- உலகத்தில் உள்ள சுதந்திரமான நாடுகள் அனைத்தும் தங்கள் நாட்டிற்கென்று சிறப்பான அடையாளங்களைக் கொண்டுள்ளன..அவற்றை தேசியச் சின்னங்கள் என்று அழைக்கழறோம்.
- வலிமையான அரசியல் அமைப்பு, தேசியச் சின்னங்கள் ஆகியவை நமது நாட்டின் ஒருமைப்பாட்டை மேம்மபடுத்துவதாகவும் விளங்குகின்றன.

**தேசியக் கொடி**

- தேசியக் கொடியை வடிவமைத்தவர் பிங்காலி வெங்கையா.
- 1947 – ஆம் ஆண்டு சூலை மாதம் 22 – ஆம் தேதி அரசியல் நிர்ணய சபையால் ஏற்கப்பட்டு அதே ஆண்டு ஆகஸ்ட் 14 – ஆம் தேதி நம் நாட்டிற்கு வழங்கப்பட்டது.
- செவ்வக வடிவுள்ள தேசியக் கொடிக் கொடியின் நீள, அகல விகிதம் 3:2 ஆகும்.
- கொடியின் மேல் உள்ள .இளஞ்சிவப்பு நிறமானது தியாகத்தையும், தைரியத்தையும் சுதந்திரப்போராட்ட வீரர்களின் தியாகத்தையும் குறிக்கிறது.
- நடுவில் உள்ள வெண்மை நிறம் தூய்மையை / உண்மையைக் குறிக்கிறது. வெண்மைப்பகுதியில் கருநீலநிறத்தில் அமைந்துள்ள சக்கரம் அறவழியில் முன்னேறிச் சென்று அமைதியினையும், செழுமையினையும் பெற்றுத்தர தூண்டுகிறது.
- இந்த சக்கரத்தின் வடிவம் சாரநாத் அசோகத்துணின் தலைப்பகுதிக்குக் அகலமும், சரிசம வீதத்தில் உள்ளது. வெள்ளைப் பகுதியில் கருநீலத்தில் உள்ள 24 ஆரங்கள் கொண்ட அசோக சக்கரம் இயக்கத்தையும், தலைமை பண்பையும் குறிக்கிறது.
- கீழே உள்ள கரும்பச்சை நிறம் இந்தியாவின் செழிப்பையும், வளமான நிலத்தையும், பசுமையினையும், நம்பிக்கையினையும் குறிக்கிறது.

**கொடியைப் பற்றி விதிமுறைகள்**

- வேறு எந்த ஒரு கொடியையும் நமது தேசியக்கொடியின் வலதுபுறமோ அல்லது கொடியை விட உயரமாகவோ பறக்கவிடக் கூடாது.
- கம்பத்தின் உச்சி வரை கொடி உயர்ந்திருக்க வேண்டும்.
- சூரியன் மறைவிற்குள் தேசியக் கொடியை இறக்கிவிட வேண்டும்.
- நமது நாட்டின், தலைவர் இறந்து விட்டாலோ அல்லது நட்பு நாட்டின் தலைவர் இறந்து விட்டாலோ நமது தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விட வேண்டும்.

**தேசிய கீதம்**

- நமது தேசிய கீதத்தை இயற்றியவர் தேசியக்கவிஞர் இராவீந்திரநாத் தாகூர் ஆவார்.

- வங்காள மொழியில் இயற்றபட்ட இப்பாடல் 5 பத்திகளைக் கொண்டது. அவற்றில் முதல் பத்தியில் உள்ள பாடல் மட்டுமே தேசியகீதமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 24 - ஆம் நாள் நமது அரசியல் நிர்ணய சபையில் நமது கீதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1911 – ஆம் ஆண்டு டிசம்பர் 27 – ஆம் நாள், கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தேசிய கீதம் முதன் முறையாகப் பாடப்பட்டது.
- தேசிய கீதத்தைப் பாடும் கால நேரம் 52 விநாடிகள் ஆகும்.
- குறுகிய வடிவ தேசிய கீதத்தைப் பாடும் கால நேரம் 20 விநாடிகள் ஆகும்.
- தேசிய கீதம், தாய்நாட்டின் பெருமை, புகழ் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக உள்ளது. அது தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு,சகிப்புத்தன்மை, நாட்டுபற்று ஆகிய அறச்செய்திகளை உணர்த்துகிறது.

**தேசிய கீதம் பொருள்**

இந்தியத் தாயே! மக்களின் இன்ப, துன்பங்களைக் கணிக்கன்ற நீயே

எல்லாருடைய மனதிலும் ஆட்சி செலுத்துகின்றாய்.

நின்திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும் கூர்ச்சரத்தையும்,

மராட்டியத்தையும்,

திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக்கிளர்ச்சி

அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் இந்திய இமயமலைத் தொடரில் எதிரொலிக்கிறது,

யமுனை,கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றிணைகிறது.

இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின் அருளை வேண்டுகின்றன. நின் புகழைப் பரப்புகின்றன.

இந்தியாவின் இன்ப, துன்பங்களைக் கணிக்கின்ற தாயே உனக்கு வெற்றி!

வெற்றி!! வெற்றி!!!

**தேசியச் சின்னம்**

- நமது நாட்டு இலச்சினை அசோகரின் சாரநாத் தூணில் உள்ள சங்கங்களின் உருவமாகும்.

- 1950 – ஆம் ஆண்டு ஜனவரி 26 –ஆம் நாள் இந்திய நாட்டின் இலச்சினையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- நமது தேசியச் சின்னத்தில் நான்கு சின்னங்கள் முதுகோடு முதுகு இணைந்த நிலையில், வட்டபீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. (பார்ப்பதற்கு மூன்று சிங்கங்கள் மட்டுமே தெரியும். நான்காவது சிங்கம் பின்புறம் மறைவாக உள்ளது). சிங்கங்களின் உருவங்கயானது அதிகாரத்தையும், கம்பீரத்தையும் காட்டுகிறது.
- சிங்கங்களின் கீழே உள்ள அடித்தட்டுப் பீடத்தில் அடியில் இடப்புறம் குதிரையும், மத்தியில் சக்கரமும், வலதுபுறம் காளையும் உள்ளது.
- **குதிரை:** ஆற்றலையும், வேகத்தையும் குறிக்கிறது.
- **காளை:** கடின உழைப்பும், உறுதியையும் குறிக்கிறது.
- **சக்கரம்:** தர்மத்தையும், அறவழியையும் குறிக்கிறது.
- இதன் கீழே தேவநாகரி மொழியில், "சத்யமேவஜெயதே" என்னும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளது.இதன் பொருள் "வாய்மையே வெல்லும்" என்பதாகும்.

**தேசியப்பாடல்**

- நமது தேசியப் பாடல் வந்தே மாதரம் ஆகும்.
- ஆனந்த மடம் என்னும் ஏட்டில் 1882 – ல் வெளியிடப்பட்ட இப்பாடலை சயஸ்கிருத மொழியில் இயற்றியவர் வங்காளக் கவிஞர் பங்கிம் சந்திர சட்டர்ஜி ஆவார்.
- 1896 இல் கல்கத்தாவில் நடைபெற்ற இந்தியத் தேசிய காங்கிரஸ் மாநாட்டில் இப்பாடல் முதல்முறையாகப் பாடப்பட்டது.
- இப்பாடலை முதல் முதலில் கல்கத்தாவில் பாடியவர் ரவீந்தரநாத் தாகூர்.
- 1950 – ஆம் ஆண்டு சனவரி 24 – ஆம் நாள், தேசியப் பாடல் நமது தேசிய கீதத்திற்கு இணையான மதிப்பினை கொண்டது.

**தேசிய விலங்கு**

- இந்தியாவில் தேசிய விலங்காக முதலில் சிங்கம் தேர்வு செய்யப்பட்டிருந்தது.
- தற்போது தேசிய விலங்காக புலி (வங்காளத்து புலி) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- வலிமை, திறமை, மிகுந்த ஆற்றல் ஆகிய பண்புகளை குறிக்கும் நோக்குடன் புலி தேசிய விலங்காக தேர்வு செய்யப்பட்டது.

**தேசிய பறவை**

- நமது தேசியப் பறவை மயில் ஆகும்.இதன் அழகான இறகுகள் நம் நாட்டின் இயற்கை அழகைப் பிரதிபலிக்கின்றன. இந்திய இலக்கியங்கள் மயிலின் பெருமையைப் பற்றி உயர்வாகப் பேசுகின்றன.

**தேசிய மலர்**

- “தாமரை” தேசிய மலர் ஆகும். அதன் தோற்றம்,பேரழகு,மணம் ஆகியன ஒப்பற்றதாகும். இதன் இதழ்கள் ஒன்று சேர்ந்திருப்பது நமது நாட்டின் ஒபற்றுமையைக் குறிக்கிறது. புராண இலக்கியங்களில் முக்கிய இடத்தை இம்மலர் பெற்றுள்ளது.
- **தேசியப் பழம் :** மா
- **தேசிய விளையாட்டு :** ஹாக்கி
- **தேசிய ஆறு :** கங்கை

**தேசிய மரம்**

- “ஆலமரம்” இந்திய “தேசிய மரம்” ஆகும். இது நம் அனைவரையும் ஒரு குடையில் கீழ் ஒன்றிணைக்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது.

**தேசிய மொழிகள்**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் 22 மொழிகளை தேசிய மொழிகளாக அங்கீகரித்துள்ளது.
- இந்தியாவின் அதிகாரப்பூர்வ ஆட்சி மொழி இந்தி.
- இந்த மொழிகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 8 வது அட்டவணையில் உள்ளது.

**தேசிய நாள் காட்டி**

- கிரிகேறிய நாள் காட்டி சகா ஆண்டு முறையை இந்தியா 22.03.1957 முதல் பின்பற்றுகிறது.
- சகா ஆண்டில் 365 நாட்கள் உள்ளது.